# தமிழ் இலக்கியத்தில் அறிவியல் சிந்தனைகள்

புஸ்பராணி **MA,Bed,M.Phil., PhD**
*உதவிப் பேராசிரியர்*
*சசூரிகலைமற்றும் அறிவியல் கல்லூரி*
*விஜயமங்கலம், திருப்பூர் - 638056*

**முன்னுரை**

“கல் தோன்றிமண் தோன்றாக் காலத்திற்கும் முன் தோன்றிய மூத்தகுடி” என்று நம் தமிழ் மொழி வழங்கப்படுகிறது. பண்டைத் தமிழனின் அறியவியல் அறிவானது அணுவில் தொடங்கி அண்டம் வரையிலும் பரவிக்கடக்கின்றது. இலக்கியம் என்பது வெறும் இரசனைக்குரியஒன்றாகமட்டும் இல்லாமல் அனுபவமும் அறிவியலும் கலந்தபடைப்பாகவே ஆக்கப்பட்டுள்ளன. தமிழர்களின் இலக்கிய அறிவானது அறிவியலின் ஆணிவேராகவே இருந்துள்ளது என்பது புரிகிறது.

**அறிவியலின் அவசியம்**

காலத்தின் தேவைக்கேற்பவளராத எந்த மொழியும் தேக்கநிலை அடைந்தேதீரும் என்பது திண்ணம். நாம் அறிவியல் யுகத்தில் வாழ்ந்து வருகிறோம். அறிவியலின் தாக்கம் உள்ளும் புறமும் நீக்கமறநிறைந்துள்ளது. எனவே நமது மொழியையும் அறிவியல் வளர்ச்சியோடு இணைத்துப் பார்க்கும் நிலை தேவையான ஒன்றாகும். அது தமிழைவளர்க்கும், தமிழிலக்கிய பெருமைகளையும் சிறப்புகளையும் உலக அரங்கில் உயர்த்தும்.

**இயற்கையான அறியவியல் அறிவு**

தான் கற்றுக் கொண்டதைபாறைகளிலும, குகைகளிலும் தகவல்களாகபதிவு செய்தனர் சங்கத் தமிழர்கள். பரந்து விரிந்தவானத்திலிருந்து காற்றும், காற்றிலிருந்து தீயும், தீயிலிருந்து நீரும, நீரிலிருந்து நிலமும் தோன்றியுள்ளது எனும் அறிவியல் உண்மைகளை இவ்வுலகுக்குப் உணர்த்தியுள்ளனர். பழங்காலத் தமிழ் மக்கள் இயற்கைசார்ந் தேவாழ்ந்துவந்தனர்.

தமிழர்கள் பெரும்பாலன அறிவியல் கருத்துக்கள் நேரடியாகக் குறிப்பிடாமல் உவமைகளாகக் குறிப்பிடப் பட்டுள்ளது. நம் தமிழ் புலவர்களைநாம் அறிஞர்களாகபார்க்காமல் இலக்கியவதிகளாகப் பார்பது என்பது குறிப்பிடத்தக்கது ஆகும். அதனால் பல அறிவியல் உண்மைகளை நாம் இலக்கியமாக வேபார்த்துப் பழகிவிட்டேம் என்பதே உண்மை.

**தமிழ் இலக்கியங்களின் வானியல் தொழில் நுட்பமும்**

**வானில் உலாவுகின்ற பலவகையான விண்மீன்களும்**

விண் மீன்களின் அமைப்பும், அவற்றின் பால் நிற்கும் உரிய இயல்பும் இராசிகள் என்று அழைக்கப் படுகின்றன. மொத்தம் பன்னிரு இராசிகள் உள்ளன. அவற்றைப் பற்றிய குறிப்பு

கீழ்கண்ட பாடல் மூலம் அறியலாம்

உருகெழு வெள்ளிவந்து ஏற்றியல் சேர,

வருடையைப் படிமகன் வாய்ப்ப, பொருள் தெரி

புந்திமிதுனம் பொருத்த,புலர் விடியல்

அங்கி உயர்நிற்ப அந்தணன் பங்குவின்

இல்லத் துணைக்கு உப்பால் எய்த, இறையமனர

வில்லின் கடைமகரம் மேவ,பாம்புஒல்லை

மதியம் மறைய,வருநாளில் வாய்ந்த

பொதியில் முனிவன் புரைவரைக் கீறி

மிதுனம் அடைய,விரிகதிர் வேனில்

எதிர் வரவுமாரி இயைகஎன இவ் ஆற்றால் (பரிபாடல் - 11)

இவற்றில் இராசி மண்டலங்கள் பற்றிய பல குறிப்புகள் காணப்படுகின்றன. வெள்ளி என்ற கோள் இடபராசியை அடைந்தது. புதன் மிதுனலக்கனத்தில் பொருந்தினான். சூரியன் கடகராசியில் இருந்தான். வியாழன் மீனத்தை அடைந்தான். சனிமகரத்தை அடைந்தான். ராகுசந்திரனைமறைத்தபடி இருந்தான் என்ற இந்நிலை அமையதிருந்த போது காற்றுவந்தது என்ற இக்குறிப்புநாள்மீன் கோள்மீன், இராசிகள் போன்ற அனைத்தின் கலவையாக இருப்பது கூறியதை உணர முடிகின்றது.

**முழுநிழவு**

முழுநிழவு பற்றி பரிபாடல் கூறுகிறது. அவற்றை கீழ்கண்ட பாடல் மூலம் அறியலாம்.

அணிநிழல் வயங்கொளிஈரெண் தீங்கதிர்ப்

பிறைவளர் நிறைமதிஉண்டி.

அணிகமணிப் பைம்பூண் அமரர்க்குமுதல்வன் நீ (பரிபாடல் 3 51-54)

**வானவில்**

வானவில் பற்றியபரிபாடல் கூறும் செய்திகள் வியக்கவைக்கின்றன. அவற்றை

அச்சிரக் காலார்த் தணிமழைகோலின்றே

வச்சிரத் தான்வானவில்லு

வில்லுசொரிபகழியின் மென்மலர் தாயின

வல்லுப்போர் வல்லாய் மலையநெட்டுருட்டுச்… (பரிபாடல் 18 36-40)

அணியணியாகத் திரண்டமேகங்கள் ஆரவாரிக்கின்றன. வானகத்தேவச்சிரப்படையுடைய இந்திரனின் வில்லென்று சொல்லப்படுகின்றவான வில்லும் தோன்றுகின்றது.

இதேக் கருத்தை முத்தொள்ளாயிரமும் கூறுகிறது

வள்ளிதழ் வாடாதவானோரும் வானவன்

வில் எழுதிவாழ்வார்விசும்பு (முத்தொள்ளாயிரம் - 5)

வானில் வர்ணங்களில் ஜாலமாய் வானவில் தோன்றிகாணப்படுகின்றது. அதனைக் கண்டபுலவன், சேரனுக்குஅஞ்சித் தான் விண்ணோரும் சேரனின் கொடியாம் விற்கொடியினைக் கவினுற அழகாகவரைந்து வைத்துள்ளனர் என்பது பொருள்.

இதேபோல் நற்றினையில் வானவில் தோன்றுவதைஅழகாக கூறப்பட்டுள்ளதை

வியலிருவிசும்பகம் புதையப் பாஅய்ப்

பெயல் தொடங்கினவேபெய்யாவானம் (நற்றினை - 317)

நீலநிறமுடையவான மானது கருநிறமேகத்தை மறைத்துள்ளது என்றும், அம்மேகக் கூட்டத்திடையே தோன்றும் மின்னல் ஒளியால் பெரியமலையகத்து பிளவுகளைக் காணலாம் என்றும் வானத்தில் தோன்றும் மின்னல் ஒளியானது பளிச்செனவீசிய மேகத்துக்கு எதிரானது மழைபொழியத் தொடங்கியது என்பது செய்தி.

**கோள்கள் பற்றியநம் முன்னோர்களின் கருத்து**

- செந்நிறமாய் இருந்த கோளைச் செவ்வாய்கோள்என்றனர். இப்பொழுது அறிவியல் வல்லுனர்கள் செவ்வாயில் சிவப்பு நிற முடைய மண் இருப்பதை ஆய்வுகள் மூலம் நிருபித்துள்ளனர்.
- வெள்ளிக்கோளில் வெள்ளித்தாது இருப்பதையும், சூரிய உதயத்துக்கு முன் விடியலை உணர்த்து வதனால் விடி வெள்ளி என்றனர்.
- புதிதாகக் கண்டறிந்த கோளுக்குபுதன் என்று அழைத்தனர்.
- வியா என்றால் பெரியஎனும் பொருள் அதனால் பெரிய கோள்களைவியாழன் என்றனர்.
- கருமையாக இருப்பதால் சனிக் கோளைகரிக்கோள் என்றனர்

**விண்மீன்களும் எரிகற்களும்**

சூரியன் போலவேதானாகஒளிரும் தன்மை கொண்ட விண்மீகளை 'நாள் மீன்' எனக் குறித்தனர். நிலவை நாள்மீன்கள் சூழ்ந்திருந்ததை

"மதிசேர்நாள்மீன" (புறம் - 160)

எனக் குறிப்பிட்டனர். அதேபோல் வான் முழுக்கநாள்மீன்கள் சூழ்ந்திருந்ததை

"வானம் மீன்பல பூப்பின் ஆனாது,ஒருவழியின்றி" (புறம் - 131)

எனும் பாடலடிகள் உணர்த்துகின்றன. விண்மீன்கள் புகைந்தாலும், எரிகற்கள் தோன்றினாலும், வால் நட்சத்திரங்கள் தோன்றினாலும் நாட்டுமன்னனுக்கு ஆபத்தோ அல்லது நாட்டுற்குதீங்கோ ஏற்படும் எனநம்பினர். இதனை

"ஆடியல் அழற்குட்டத்து

………………………

தோலைநாள்மீன் துறைபடிய" (புறம் - 229)

கிழார்பதிவு செய்கிறார். பழங்கால அரண்மனை, மாளிகைகளில் வானமண்டலத்தின் அமைப்புகள் ஓவியமாகத் தீட்டப்பட்டிருந்தன. எனும் அடிகளில் விண்மீன்களின் இடமாற்றத்தால் வால் நட்சத்திரம் தோன்றிய எட்டாம் நாள் சேரமன்னன் இறந்த செய்தியை கூடலூர்கிழார் கூறிகின்றார்.

**மழை பெய்யும் முறை**

மழைப் பொழிவு என்பது மேகம் கடல் நீரைப் பெற்று குளிர்ந்து மழையாகப் பொழிகிறது. இவற்றை பரிபாடலில்

நிறைகடல் முகந்துராய் நிறைந்துநீர்தளும்பும் தன்

பொறைதவிர்புஅசைவிடப் பொழிந்தன்றுவானம்

நிலமறைவதுபோல் மலர்புனல்தலைத்தலைவிஇ

மலைமாககழியக் கதழும் அரவியிழியும் (பரிபாடல் 6 1-4)

இதேப் போல இரவில் மழைப்பொழிந்ததை மக்கள் பகலிலேயே அறிந்தனர் என்பதை (6 50-60) பாடல்கள் மூலமும், தாங்கமாட்டாதமேகங்கள் கரையையுடைத்து பெருமழையைப் பொழிந்தது என்று (7 1-7), வானத்து மேகங்களின் துளைகள் சிதைவுற்றன அதனால் பெருமழை பெய்தது (7 25-30) மூலமும், மேகங்கள் பெருமழையை விரை வோடு பெய்து சுனைகள் நிறைந்து வழிந்தது எனவும் (14 1-7),மேகங்கள் கடலில் படிந்து அதன் வளத்தை எடுத்து இடியுடன் சினம் கொண்டு பெருசத்தத்துடன் கூடியமழையைப் பொழிந்தது என்று(20 1-10)பாடல்களின் மூலம் மழைப் பொழிவைப் பற்றிப் பரிபாடல் குறிப்பிடுகின்றது.

**முடிவுரை**

அறிவியல் அறிஞர்கள் வெகுகாலமாக போராடி கண்டு பிடித்தவியத்தகு அறிவியல் சாதனைகளை வெறும் கண்ணால் மிகச் சாதாரனமாகவும் துள்ளியமாகவும் கண்டு உணர்ந்து கூறியது வியப்பளிக்கிறது. இலக்கியத்தில் வானியல் பற்றியும் இயற்கையையும் இயற்பியலையும் பற்றிய கருத்துக்களும் மிக அதிக அளவில் காணப்படுகிறது. தமிழ் இலக்கியத்தை பக்தி இலக்கியமாகபாரிக்காமல் அறிவியல் சிந்தனையோடு கூர்ந்துகவனித்தால் இன்னும் அறிய செய்திகளைக் கண்டுபிடித்து பயன் பெறலாம்.

**துணைநூற் பட்டியல்**

1. பரிபாடல்
2. முத்தொள்ளாயிரம்
3. நற்றினை
4. புறநானுறு